அவர்கள் திருச்சி நகரத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் அது குறித்து அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, திருச்சி ஜங்ஷன் பகுதிக்கு வெகு அருகாமையில் இருக்கிற பொது மக்கள் அதிகமாகக் கூடுகிற இடத்தில் இந்த இடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் வீட்டு வசதி வாரியத்தில் நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு குடியிருப்பிற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தமிழக அரசின் மூலமாக அந்த இடம் நகரத்தின் மையப் பகுதியில் இருக்கிற காரணத்தினால் அந்த இடம் வீட்டு வசதி வாரியத்திற்கும் மற்ற காரியங்களுக்கும் தேவைப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வீட்டு வசதித் துறை இந்தியத் துணைக் கண்ட அமைச்சர்கள் மாநாட்டில் நான் கலந்துகொண்டபோது டெல்லியிலே அங்கே அப்போது இராணுவ அமைச்சராக இருந்த திரு. நரசிம்ம ராவ் அவர்களைச் சந்தித்து திருச்சிக்கு அந்த இடம் தேவை என்பதை மட்டுமல்ல தமிழகத்திலே ஒரு நல்ல நகரம் உருவாகிற அளவுக்கு 273 ஏக்கர் நிலம் அந்த இடத்தில் இருக்கிறது. அதற்கு மாற்று இடமாக 292.8 ஏக்கர் நிலம் தருவதாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் எனக்கு நினைவு இருக்கிறது, ஒரு முறை துப்பாக்கி சுடும்போது அங்கே ஒருவர் இறந்துவிட்டதாக பத்திரிகையிலே பார்த்ததாக எனக்கு நினைவு இருக்கிறது. ஆகவே ஆபத்தான அந்தச் சூழ்நிலையில் அது அங்கே இருக்கக்கூடாது என்று அரசு மீண்டும் எடுத்துச் சொல்லும். மத்திய அரசு அதற்கு உதவும் என்று நம்புகிறேன்.

தூத்துக்குடி மீன்வளத்துறைத் தொழிலாளர்கள்,

566—(*வினா எண். 3527) திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மீன் துறைக்கு சொந்தமான பி.எஸ். 2., பி.எஸ்.5., பி.எஸ்.6 ஆகிய முன்று மீன்பிடி படகுகள் இப்பொழுது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன் : ஒரு விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

733 * ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1986 ஏப்ரல் 25]

திரு. எஸ். டேனியல் ராஜ் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான பி. எஸ். 2, பி. எஸ். 5, பி. எஸ். 6 ஆகிய 3 மீன்பிடி படகுகள் இப்போது மங்களூருக்கு அனுப்பப்படுவதால் அவற்றில் பணியாற்றி வந்த 20 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? அந்த 20 மீனவர்கள் குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர்கள் குழந்தைகளும் தாய்மார்களும் பசியாலும் பட்டினியாலும் வாடுகிறார்கள். ஆகவே அரசு மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான 3 படகுகளும் சுருக்கு வலை மீன்பிடிப்பிற்கு ஏற்றவை. காரணம் இவ்வகையான மீன் பிடிப்புக்கு ஏற்ற அளவுக்கு கிழக்குக் கடற்கரையில் வாய்ப்பாக இல்லை. எனவே மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வந்தது. அதில் பணியாற்றிய மீனவர்கள் பங்கு முறையில் மீன் பிடித்தார்கள். ஆகவே சரியான வருமானம் இல்லை, அவர்களும் மீன்பிடிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. படகுகளை மேற்குக் கடற்கரைக்கு எடுத்துச் சென்றதால் அவர்கள் தாங்களாகவே வேறு ஒரு படகில் பணிக்குச் சென்று விட்டார்கள். எனவே வேலை அளிக்கும் கேள்விக்கு இடம் இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புக் கொடுக்க இயலாது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அந்த மீனவர்களின் குடும்பங்கள் இன்றைக்குப் பசியாலும் பட்டினியாலும் வாடுவதால் அவர்களுக்கு மாற்று உதவிகள் செய்வதற்கு கடன் வழங்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்கிற வாய்ப்பு ஏதாவது இருந்து அதை அவர்கள் கோரிக்கையாகக் கேட்பார்களானால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

மீனவர்களுக்கு அடையாள அட்டைகள்.

567—(*வினா எண். 5386)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?